**வவுனியா நகரசபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 22 ஆகஸ்ட் 2018 இல் சபையின் தவிசாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறுவர் பூங்கவொன்றினை வெளி நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியதனால் வருமதியாயிருந்த குத்தகை வருமானம் கூட்டுமொத்தம் ரூபா 125,000 கடந்த 05 வருடங்களாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படாமையினால் மீளாய்வாண்டின் திரண்டநிதி குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) வவுனியா குளப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய உதவியுடன் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 40 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு 17 மே 2017 அன்று கையளிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் முறைமையின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படாமையினால் சொத்துக்கள் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 05 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 489,980 கடந்த 01 தொடக்கம் 02 வருடங்களாக அறவீடு செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 28,795 கடந்த 3 வருடங்களாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

கூட்டுமொத்தம் ரூபா 10,139,375 பெறுமதியான 05 நிலுவைகள் உரியவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டிராது கடந்த 01 தொடக்கம் 04 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மைகள்

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 232.06 மில்லியன் கூட்டுமொத்தமான பதினொரு கொடுக்கல் வாங்கல்களை பௌதீகச் சொத்துக்கள், தொழில்நுட்ப அறிக்கைகள் கிடைக்கப்பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமை |
|---|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் | | |
| (i) பிரிவு 44(2) | | நகர சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 54(1) | | வீதவரி சம்பந்தமாக வீதவரி அட்டவணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் செயலாளாரிடம் கையளிக்கப்பட்டு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொடுப்பனவுகள் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் III இன் பிரிவு 54(2) | | வீதவரி அறவீடுகள் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) இலக்கம் 316(2) | | நாளாந்த காசு மீதிகள் காவற்கட்டுகாப்பில் வைக்கப்படும் பொருட்களுக்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) இலக்கம் 571(2) மற்றும் (3) | 740,043 | 10 காலம் கடந்த வைப்புகள் தொடர்பில் கடந்த இரு வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்று நிருபத்தின் 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 58 வாகனங்களுக்கு ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் | | நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் பௌதீக பரீட்சிப்பின் போது 14 இடங்களில் இனங்காணப்பட்ட 78 அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக அதிகாரமளிக்கப்படாத நிர்மாணப் பணிகளை அகற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சுற்றறிக்கை 20 மார்ச் 1985 இன் டீஈசீ/01 ஆம் இலக்கம் மற்றும் 11 ஆகஸ்ட் 2008 இன் 21 ஆம் இலக்கம். | | பொதுச் சுகாதார பரிசோதகருக்கு நகர அபிவிருத்தி கூட்டத்தில் பங்குபற்றியமைக்காக ரூபா 31,000 கொடுப்பனவு சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டுள்ளது. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 28,523,811 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 37,569,664 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 23,262,046 | 29,895,123 | 26,189,258 | 42,649,494 | 23,162,046 | 18,964,090 | 25,983,539 | 46,355,358 |
| (ii) | வாடகைகள் | 34,141,469 | 36,494,175 | 37,091,229 | 5,434,906 | 33,431,949 | 39,990,685 | 42,185,808 | 4,837,853 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,515,000 | 1,946,555 | 1,946,555 | -- | 2,263,500 | 1,998,937 | 1,998,937 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 126,804,000 | 110,948,701 | 126,874,659 | 28,191,591 | 128,871,003 | 98,151,117 | 115,441,740 | 22,557,730 |

### 2.2.2 வீதவரிகள்

வீதங்கள் மற்றும் களியாட்ட வரி நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 42.5 மில்லியன் இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அறவிடப்பட வேண்டிய வாடகைகள் ரூபா 5,434,907 தொடர்பாக கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக சபையினால் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 58 கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்த கடந்த 01 தொடக்கம் 47 ஆண்டுகளாக அவற்றுக்கான வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 315 கடைகள் மற்றும் காணிகளுக்கான வாடகைக்கு வழங்கப்பட்ட வாடகை ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 தொடக்கம் 33 வரையான காலங்கள் கடந்த நிலையிலும் அவை தொடர்பில் மீள ஒப்பந்தம் செய்யப்பட்டிராது பயன்பாட்டிற்கு விடப்பட்டிருந்தன.

(ஈ) சபைக்கு சொந்தமான 118 கடைகள் பல வருடங்களுக்கு முன்பு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இவற்றில் 77 கடைகளை சபையின் அனுமதி பெறப்பட்டிராது ஒப்பந்தக்காரர்கள் வேறு தரப்பினர்களுக்கு விற்பனை செய்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 12,064,491 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 16,127,100 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

### 2.2.5 மேலதிக கொடுப்பனவு

சபை நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 11 வீதிப் புனரமைப்பு மற்றும் கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பில் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 1,149,955 மேலதிகமாக ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக்கழிவுகள் குவிக்கப்படும் இடத்தில் திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காது ஒன்றாகவே குவிக்கப்படுகின்றன.

(ii) திண்மக்கழிவுகளுக்கான கொம்போஸ்ட் மற்றும் மீள்சுழற்சிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 இணங்காணப்பட்ட நட்டங்கள்**

பெறுமதிமிக்க 105 நூல்கள் 8 வருடங்களுக்கு மேல் பாவனையாளர்களுக்கு இரவல் வழங்கப்பட்டிருந்தும் அந்நூல்கள் திரும்பவும் மீளளிக்கப்படாமை தொடர்பிலான இழப்பு அவதானிக்கப்பட்டது.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்ம கழிவுகளில் இருந்து உரம் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டில் ரூபா 1,079,891 செலவு செய்யப்பட்ட போதும் உர விற்பனை மூலம் மீளாய்வாண்டில் ரூபா 147,210 மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது மீளாய்வாண்டிற்கான கழிவு உரம் தயாரித்தல் செலவில் 14 சதவீதமாக இருந்தது.

(ஆ) சபையின் நூலகத்தின் உசாத்துணைப்பகுதியில் இருந்து பெறுமதிமிக்க 10 நூல்கள் 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் ஒரு வருடத்திற்கு மேலாக மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டவர்களில் 160 தரப்பினர்களுக்கு வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபை எல்லையில் அமைந்துள்ள 4 தொலைத்தொடர்பு நிறுவனங்களினால் பொருத்தப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் அளவு மற்றும் அவற்றின் உயரம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு பெறுமதி அந் நிறுவனங்களிடமிருந்து இதுவரை அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | பற்றாக்குறை |
|---|---|---|---|
| சிரேஸ்ட மட்டம் | 03 | 01 | 02 |
| இரண்டாம் மட்டம் | 51 | 43 | 08 |
| ஆரம்ப மட்டம் | 129 | 110 | 19 |
| | **183** | **154** | **29** |

### 3.5 பயன்படுத்தப்படாத வைப்புக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் மதில் மற்றும் கட்டிடங்களுக்களின் சுவர்பகுதியில் வர்ணம் பூசுவதற்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 500,000 உரிய நோக்கத்திற்கு உபயோகிக்கப்படாது கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலகக் கட்டட நிதி ரூபா 745,225 கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிராது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 12,480,360 பெறுமதியான ஆறு வேலைகள் தொடர்பில் ஒழுங்கான முறையில் தரைகளுக்கு புற்கள் பதிக்கப்பட்டிராமை, வீதியின் இரு ஓரங்களுக்கும் கற்கள் உரியவாறு அடுக்கப்படாமையினால் வீதியோரங்கள் செப்பனில்லாமை, வீதிகள் வெடிப்படைந்துள்ளமை, அனுமதிக்கப்பட்ட மண் வகைகளுக்கு முரணான கிரவல்கள் பயன்படுத்தப்படடிருந்தமை போன்றன அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் மரக்காரம்பளை உள்ளக முதலாம் வீதிக்கான கல்வெட்டு அமைத்தலுக்கென சபை நிதியிலிருந்து ரூபா. 107,957 ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது பௌதீக செவ்வைபார்த்தலுக்கு கிடைத்திருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.7.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துகள்

சபையின் களஞ்சியத்தில் ரூபா 1,915,830 பெறுமதியான பொருட்கள் 02 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்படுகின்றன.

#### 3.7.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

சபைக்குரித்தான 13 வாகனங்கள் இரு வருடங்களுக்கு மேலாக பராமரிப்புக்களின்றிக் காணப்படுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

#### 3.7.3 கையளிக்கப்படாத சொத்துக்கள்

நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 18 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே பாதகமான ரூபா 568,445 தொடக்கம் சாதகமான ரூபா 12,485,782 வரை அல்லது 22.60 சதவீதம் தொடக்கம் 51.10 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே பாதகமான ரூபா 2,768,630 தொடக்கம் சாதகமான ரூபா 13,265,166 வரை அல்லது 33.39 சதவீதம் தொடக்கம் 15.47 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) பதிவு செய்யத் தவறியமை<br>(ii) பாதுகாப்பினை ஸ்தாபிப்பதற்கு தவறியமை |
| (ஆ) | கையிருப்புக்கள் | முறையற்ற இருப்புக்கட்டுப்பாடு |
| (இ) | ஆளணி முகாமைத்துவம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியமை |
| (ஈ) | ஒப்பந்தங்கள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் போதியளவு மேற்பார்வை காணப்படவில்லை. |